[1996 ஆகஸ்ட் 10

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 152, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

152--

ஆமணக்கு எண்ணெய்த் தொழிற்சாலை

*630--**திரு. பி.என். வல்லரசு :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் ஆமணக்கு எண்ணெய்த் தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் ஆமணக்கு எண்ணெய்த் தொழிற்சாலையை உருவாக்கும் திட்டம் எதுவும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 153, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

153--

செய்யாற்றில் சார்பு நீதிமன்றம்

*279--**திரு. வ. அன்பழகன் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாற்றில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்த அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?